[டாக்டர் மு. கருணாநிதி] [1975 ஏப்ரல் 10

(முற்பகல் 10-30)

இந்த மீன் பிடி கப்பல்களை வட்டம் இட்டு இந்திய கப்பற் படையினர் இவற்றை சென்னை துறைமுகத்திற்குக் கொண்டு வந்தனர். சென்னை துறைமுகத்திற்குக் கொண்டுவந்ததற்குக் காரணம் கப்பல் பிடிபட்ட இடத்திலிருந்து அருகில் உள்ள துறைமுகம் சென்னைதான். அதாவது 70 மைல் தொலைவு. ஆனால் ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகப்பட்டிணம் துறைமுகம் மீன்பிடி கப்பல்கள் பிடிபட்ட இடத்திலிருந்து 380 மைல் தூரம் உள்ளது. சென்னை துறைமுகத்திலிருந்து மறுபடியும் விசாகப் பட்டிணம் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றால் 450 மைல் தூரம் உள்ளது. எனவே, இந்தக் கப்பல்களை சென்னை துறைமுகத்திலேயே பாதுகாப்பில் வைக்கவேண்டுமென்று இந்தியக் கப்பற்படை முடிவு செய்தது.

மேலும் மீன்களை விற்பனை செய்வது, மாலுமிகளைக் கண்காணிப்பது, அதையொட்டி மேலும் பல பணிகளையும் தமிழக அரசே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதைத் தொடர்ந்து தக்க மொழி பெயர்ப்பாளர்களைக் கொண்டு மீன்பிடி கப்பல்காரர்களை விசாரணை செய்த பிறகு கடற்படை அதிகாரிகள், சட்ட ஆலோசகர்கள் மற்றும் அரசு வழக்குரைஞர்கள் ஆகியவர்களைக் கலந்து ஆலோசித்ததில் வெளிநாட்டினருக்கான சட்டம், மற்றும் அனுமதி வழங்கும் விதிகளின்கீழ், தமிழக சென்னை நகர காவல் துறை இதில் நடவடிக்கை எடுக்கலாம் என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டதின் பேரில் தமிழக காவல் துறையே, குறிப்பாக சென்னை நகர காவல் துறை ஆணையாளரே மேல் நடவடிக்கை எடுக்கலாம் என அரசு கருதுகிறது.

எனவே, 1946-ஆம் ஆண்டு வெளிநாட்டினருக்கான சட்டம் 3(2)(எ) பிரிவு, மற்றும் 14-வது பிரிவின்கீழ் வழக்கு தொடர வேண்டும். அதாவது இந்தப் பிரிவின்படி "அனுமதியில்லாமல் குறிப்பிட்ட மார்க்கத்திலோ, துறைமுகத்திலோ வெளிநாட்டினர் செல்லக்கூடாது". இப் பிரிவின் கீழ் அவர்கள் மீது சென்னை நகர காவல்துறை அதிகாரி நடவடிக்கை எடுப்பார் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தகவல் கோரல் —தொடர்ச்சி.

(ஆ) சிக்கிம் இந்திய யூனியனில் அசோசியேட் உறுப்பினராகச் சேருவது பற்றியச் அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மீது விவாதம் நடத்தாதது குறித்து.

*திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே,

Under rule 142 (c), I raise a point of order.

கான்ஸ்ட்டிட்யூஷன் 36வது அமெண்ட்மெண்ட் அக்டோபர் மாதத்தில் சர்குலேட் செய்யப்பட்டது. சிக்கிம் அசோசியேட் மெம்பராக சேருவது பற்றி இதுவரையிலும் இங்கே விவாதிக்கப்படவில்லை. நான் ஜனவரி 7ஆம் தேதி இந்த மோஷனை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டு மென்று கூறியிருந்தேன். இதுவரையிலும் விவாதம் செய்யப்படவில்லை. பார்லிமெண்டில் இதைப்பற்றி விவாதம் நடத்தியிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த மெம்பர்கள் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். எந்தக் காரணத்தினால் இங்கே இது விவாதிக்கப்படவில்லை என்பதைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் நோட்டீஸ் கொடுத்தது ஜனவரி 7ம் தேதி. நம்முடைய சட்ட மன்றம் கூடியது பிப்ரவரி 20ம் தேதி. பிப்ரவரி 22ம் தேதி இதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதலைக் கொடுத்து விட்டார். ஆகவே விவாதிக்கத் தேவையில்லையென்று கருது கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானம் இல்லையா, அதைப் படியுங்களேன்.

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) வினா நேரத்திற்குப் பிறகு கவன ஈர்ப்பு அறிவிக்கையை உடனடியாக எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 41ன் கீழ்

A member may, after questions, and with the previous permission of the Speaker, call the attention of a Minister to any matter of urgent public importance . . . .

என்று இருக்கிறது.

நம்முடைய அஜெண்டாவிலும் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பிறகு இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றுதான் இருக்கிறது. ஆனால் 82 ஆம் விதியின் கீழ் அறிக்கை படிப்பதை முதலில் எடுப்பது முறையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அஜெண்டாவில் வருவதில்லை. கவன ஈர்ப்புத் தீர்மானம் அஜெண்டாவில் வருவதில்லை. இதற்கும் முன்னே எப்படி முதலமைச்சர் ஸ்டேட்மெண்ட் கொடுக்கலாம் என்று